<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>
<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

MCOP.NO. 164/2019 P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | கலைவாணி |
| HUSBAND NAME | - | வாசு |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 14.12.2023.

நான் இந்த மனுவில் 1 ஆம் மனுதாரர். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். **விபத்து குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ.1 ஆகும். விபத்தில் இறந்த என் கணவரின் பிரேத பரிசோதணை அறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ.2 ஆகும். என்னுடைய கணவரின் வாரிசு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ.3 ஆகும். விபத்தில் சம்மந்தப்பட்ட லாரியின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ.4 ஆகும். விபத்தில் சம்மந்தப்பட்ட இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல்**

செய்கிறேன் அது ம.சா.ஆ.5 ஆகும்.

விபத்து குறித்த குற்றவியல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற அறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்அது ம.சா.ஆ.6 ஆகும். விபத்தில் சம்மந்தப்பட்ட லாரியின் காப்பிட்டு பாலிசியின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்கிறேன் அவை ம.சா.ஆ.7 ஆகும். என் கணவர் சென்ற இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் மற்றும் அந்த இருசக்கர வாகனத்தின் காப்பீடு பாலிசியின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்கிறேன் அவை ம.சா.ஆ.8 மற்றும் 9 ஆகும். என்னுடைய ஆதார் அட்டை நகல் பேன் கார்டு நகல், மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகல் ஆகியவை தாக்கல் செய்கிறேன் அவை ம.சா.ஆ.10 முதல் 12 ஆகும். என் கணவரின் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்கிறேன் அது ம.சா.ஆ.13 ஆகும்.

<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவரின் வருமானத்தை நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவரின் வருமானத்தை நான் மிகை படுத்தி கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலை செய்கிறேன். இரு சக்கர வாகனத்தில் என் கணவர் பின்னால் அமர்ந்து சென்ற போது விபத்து ஏற்பட்டதால் நஷ்ஈடு எதுவும் நாங்கள் பெற வேண்டும் என்றால் அந்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரிடம் மட்டும் தான் பெற முடியும் என்றால் சரியல்ல. அதனால் லாரியின் காப்பிட்டளார் எங்களுக்கு எந்த வித நஷ்டுஈடு வழங்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கேட்டுள்ள நஷ்டஈடு தொகை எந்த வித ஆதாரமும் இல்லாமல்

மிகவும் அதிகப்படியாக கேட்டுள்ளோம் என்றால் சரியல்ல. ஆகவே எங்களுடைய மனு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY